உ
சிவமயம்



யாழ்ப்பாணம் - தொல்புரம்

சைவ வேளாண் பிரபு கனக சுந்தர முதலியார்

மரபில் உதித்த

திரு. மாதவர் கனகசுந்தரத்தின்

கனிஷ்ட புத்திரன்

# அமரர் க. தேவதாசன்

B.O.L. Dip–in–Ed.

அவர்கள்

சிவ பதப் பேறடைந்தமை குறித்த

# ★ நினைவு மலர் ★

1996 - 05 - 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கனகசுந்தரம் தேவதாசன்

B.O.L. Dip-in-Ed.

அவர்களின்

# வாழ்க்கைக் குறிப்பு

---

கனகசுந்தரம் சிவஞானவதியாரின் இளைய புதல்வர் தேவதாசன் பிறப்பு : *1933-07-31.*

ஆரம்பக் கல்வி : மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில். பின்னர் விக்டோரியாக் கல்லூரியில் க.பொ.த. சித்தி.

1962இல் இந்தியா சென்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஐந்து ஆண்டுகள் பயின்று B.O.L. பட்டம் பெற்றார். கொழும்பில் உள்ள சென். தோமஸ் கல்லூரியில் முதலில் கல்வி கற்பித்தல் பணியை ஆரம்பித்தார்.

டாக்டர் பொன்னம்பலம் தங்கம்மாவின் புத்திரி கமலாதேவியை 1970-03-16 இல் திருமணம் செய்தார்.

இவர்களின் இல்லற வாழ்வில் தேவசுந்தரி, வசந்தகுமார், சுவர்ணகுமார், தேவகி என்போரைப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்றார்.

1971 இல் இடைக்காடு மகாவித்தியாலயத்தில் கற்பித்தார்.

1981 இல் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும் கல்வி கற்பித்தார்.

இக்காலத்தில் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை (Dip-in-Ed.) மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 இல் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலையிலும் கற்பித்தலைத் தொடர்ந்து 1991 இல் ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்ற பின் திருநாவுக்கரசு வித்தியாசாலையிலும், பின்னர் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும் பகுதி நேர ஆங்கில ஆசிரியராக கடமை ஆற்றினார்.

இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற வேளையில் வெளிநாட்டு மாணவர் சங்கச் செயலாளராகவும் இருந்தார்.

சருகம்பனையூர் அருள்மிகு நாக இராச இராசேஸ்வரி தேவஸ்தான செயலாளராக இருந்தார்.

ஓய்வு பெற்ற பின் வலி மேற்கு ஓய்வூதியச் சங்க செயலாளராகவும் வட்டு. கிழக்கு சனசமூக நிலையத் தலைவராகவும் இருந்தார்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்க நிர்வாக சபை உறுப்பினராக இருந்து பிரவேச பண்டித பாலபண்டித வகுப்பு மாணவர்களுக்கு கற்பித்தலையும் மேற்கொண்டார்.

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் புராண படலம் ஓதுவதில் கலந்துகொண்டு நற்சிந்தனையும் வழங்குவார்.

கோயில் விழாக் காலங்களிலும் பொது வைபவங்களிலும் சொற்பொழிவு ஆற்றுவார்.

இசைத்துறையிலும் விதிவிலக்கானவர் அல்லர்.

இறப்பு : 1996-04-29.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாமாலை

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை.

## தேவாரம்

ஆலந் தானுகந் தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்துஞ்
சீலந் தான் பெரிதும் உடையானை
சிந்திப் பாரவர் சிந்தை யுளானை
ஏல வார் குழலாளுமை நங்கை
என்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனை கம்பனெம்மானைக்
காண கண்ணடி யேன் பெற்றவாறே.

மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடு முடி
நற்றவா உனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில
ஊருமுலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட
பாரும் விசும்பு மறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெரு வாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர் நேயா!
ஒப்பிலா மாமணிக் கிரி வாசா!
வித்தகா! ஞானசத் திரிபாதா!
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

என் செயலாவது யாதொன்றுமில்லை இனி தெய்வமே
உன் செயலே யென்றுணரப் பெற்றேன் இந்த ஊனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்றுமில்லை பிறப்பதற்கு மண்மேல்
முன் செய்த தீவினையோ இவ்வனமே வந்து மூண்டதுவே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்:

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தொல்புரம்

# கனசுந்தரம் தேவதாசன்

B.O.L. Dip-in-Ed.

# வாழ்க்கை வளம்

---

## வெண்பா

ஆண்டு தொண்ணூற்றாறு அமைந்ததொரு சித்திரையில்
நீண்டபுகழ்த் தேவதாசன் ஏகினார்—மாண்டலத்தீர்
நில்லா உலகதனை நிலையாக எண்ணாதீர்
பல்லுயிரும் காப்பான் சரண்.

## ஆசிரியப்பா

இந்து சமுத்திரத் திரத்தினத் துவீபம்
என்றே இசைத்திடும் ஈழநன் னாட்டின்
சிரமென விளங்கும் சீரிய யாழ் நகர்
மேல் பால் உள்ளது மிகுசிறப் புடையது.
தொல்புரம் என்னும் தொல்பதி யாகும்
அப்பதி தன்னில் அன்பும் பண்பும்
அமையப் பெற்ற தனிப்பெரும் பெருமை
வாய்ந்த கனக சுந்தர முதலி
மரபில் உதித்தவர் மாதவர் கனக
சுந்தர மாவார் அவர்நன் மனைவி
சிவஞான வதியார் இல்லற மென்னும்
நல்லறம் பூண்டு இனிதே வாழ்ந்தனர்.
அவர்வாழ் வதனில் அன்புடன் பூத்த
இனியநன் மலர்கள் மூவர் ஆவர்
பாலகிருஷ்ணன் தேவதாசன்
திலகஞானம் என்னும் மூவர்
பிள்ளைகள் தாமே கல்வியில் கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையி லூக்கம் என்றே யவர்கள்
இனிதாய் வளர்ந்தனர் சங்கானைக் கிராம
சபைதனில் செயலாளராக இருந்த
கனக சுந்தரம் சிவஞான வதியார்
என்போர் தமது இனிய மக்களைக்
கண்ணினைக் காத்திடும் இமையது போலக்
காத்தே வளர்த்தனர் கருத்துடன் நாளும்
பாலகிருஷ்ணன் சீமெந்துக் கூட்டுத்
தாபனந் தன்னில் தக்கோர் போற்ற
பதவி பெற்றுப் பாங்காய் வாழ்ந்து
மகேஸ்வரி என்னும் மங்கைநல் லாளைத்
திருமணம் புரிந்து சிறப்பாய் வாழ்கிறார்
திலக ஞானம் என்னும் செல்வி
பொலிஸ்மா அதிபர் ராஜேஸ் வரனைத்
திருமணம் புரிந்து சீருள வாழ்ந்து
தேவராஜன், தருமராஜன், கேசவராணி,
சொரூபராணி என்போரைப் பெற்றார்
இத்தகு சிறப்புடைச் சோதரர் தம்மொடு
மெத்தவும் அன்பொடு வாழ்ந்தார் அமரர்;
தந்தைசொல் மிக்க மந்திர மில்லை
தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை
உடன்பிறப் பாளர்மேல் உலகிலே இல்லை
என்னும் கொள்கை பூண்ட இனியார்
தேவதாசன் தன் ஆரம்பக் கல்வியை
மூளாய் சைவப் பிரகாச வித்தியா
சாலையில் கற்றார் உயர்தரக் கல்வியைச்
சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி தன்னிற்
கற்றுத் தேறிக் கண்ணியம் பெற்றார்.
இவர்தம் இயல்பு இவர்தம் திறமை
இவற்றைக் கண்ட இவரது பெற்றோர்
உயர்கல்வி கற்றுப் பட்டம் பெறவே
அண்ணா மலைக்கு அன்புடன் அனுப்பினார்
அண்ணா மலையில் அமைந்த பல்கலைக்
கழகம் தன்னிற் கற்றுத் தேறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத் தேழில்
B.O.L· பட்டம் பெற்றுக் கொண்டார்.
கொழும்பில் உள்ள சென்தோமஸ் கல்லூரி
தன்னில் முதலில் கற்பித் தாரே
கருகம்பனையில் கண்ணியம் மிக்க
வன்னிராய முதலி வழிவரு
டாக்டர் பொன்னம்பலமும் அவர்துணை
தங்கம்மாவும் செய்த இல்லறத்தின்
பயனாய் உதித்த பண்புடை மக்களில்
கமலா தேவியைக் கடிமணம் புரிந்து
தன் சோதரர் போல் தன்துணை சோதரர்
ஆகிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்
இராஜேஸ்வரனோடு ராஜேஸ்வரியும்
பரமேஸ்வரியுடன் மகேஸ்வரி தங்கை
புவனேஸ்வரி, இராஜேந்திரன் (அவுஸ்திரேலியா) தன்னொடு
அருளம்பலமும் (லண்டன்) இளையதம்பியும் (லண்டன்)
கமலாம்பிகை நகுலேஸ்வரி தம்பி
நகுலேஸ்வரனாம் (லண்டன்) நன்மைத்துணருடன்
அன்பும் மதிப்பும் பாசமும் வைத்து
அன்புடன் வாழ்ந்து அமரர் இருந்தார்
அவர்தம் வாழ்வில் அருமையாய்ப் பூத்தவர்
தேவசுந்தரி வசந்த குமாரொடு
சுவர்ண குமாரும் தேவகி தானே
தேவ சுந்தரி கொக்குவில் தனிலுறு
தொழில் நுட்பக் கல்லூரியில்
H.N.D.A. பட்டக் கல்வியை பயில்கின்றார்.
வசந்த குமாரும் இந்திய நாட்டில்
கொம்பியூற்றர் பி.எஸ்.சி. தன்னைக் கற்றிடும்
இரண்டாம் மகனாம் சுவர்ணகுமாரும்
வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியில்
A/L படித்து இசைவுடன் வாழ்கிறார்
தேவகி என்னும் சின்னஞ் சிறுமி
வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியில்
கல்வி கற்றுக் கருத்துடன் உள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லற வாழ்வின் இடைக் காலத்தில்
பிள்ளைகள் உயர்வு பேணி வாழ்ந்தவர்
தனக்கென வாழாத் தகைமை பெற்றவர்
அவரைக் காலன் அழைத்தே விட்டார்
அவரது சேவை அனைத்தும் சேர்த்தால்
அமைந்திடா தெங்கள் எண்ண அலையில்
கொழும்பிலும் இடைக்காடு மகாவித் தியாலயத்திலும்
இளவாலை மெய்கண்டான் தன்னிலும் பின்னர்
வட்டுக் கோட்டை திருஞான சம்பந்தர்
தன்னிலும் கற்பித்து ஓய்வு பெற்றார்.
ஓய்வு பெற்று வாழ்ந்ததன் பின்னும்
வட்டுக் கோட்டைத் திருநாவுக் கரசிலும்
சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி தன்னிலும்
பகுதி நேர ஆங்கில ஆசிரியர்
பதவி ஏற்றுப் பண்புடன் வாழ்ந்தார்.
அண்ணா மலையிற் கற்றிடும் போது
வெளி நாட்டு மாணவர் சங்கத்
தலைவராய் நிற்கும் தகுதி பெற்றார்.
வலி மேற்கு ஓய்வூதியச் சங்கத் தலைவர்
வட்டுக் கிழக்கு தாவளையில் உள்ள
சனசமூக நிலையத் தலைவர் ஆவார்
வட்டுக் கோட்டைத் தமிழ்ச் சங்கத்தின்
நிர்வாக உறுப்பினர் ஆகத் திகழ்ந்தார்.
பிரவேச பால பண்டித வகுப்பில்
கற்பித்து நல்ல பேரும் பெற்றார்.
சித்தங் கேணிச் சிவசிதம்பரர் ஆலயத்தில்
பிரதி ஞாயிறு தோறும் சென்று
புராண படலம் ஓதுவ தோடு
சொற்பொழிவு செய்தும் தொண்டுகள் புரிந்தார்.
பண்ணொடு பாடிப் பலரும் மகிழ்வுற
வாழ்ந்தவர் எங்கள் அமரர் ஆவார்.
கருகம் பனையூர் நாக ராச
ராஜேஸ்வரி தேவஸ்தான செயலாளர் ஆவார்.
தந்தை வழியில் தமையனாருடனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாலை தனிலுறை வரத ராசரின்
ஒன்பதாம் திருவிழா உபய காரர்
வழக்கம் பறையுறு முத்து மாரியின்
திருவெம் பாவைத் திருவிழாக் காரர்
சைவா சாரம் தமிழிற் புலமை
ஆங்கில அறிவு அன்பு நிறை உள்ளம்
இல்லற வாழ்வின் இனிய தலைவன்
மனைத் தக்காளின் மங்கல விளக்கு
மக்கட் கெல்லாம் மாண்புறு தந்தை
சோதரர் தமக்குச் சொல்லொணாத் துணைவன்
இத்தகு சிறப்புறு ஏந்தல் தன்னை
காலன் வந்து கவர்ந்தே சென்றான்
பிறந்தவர் மண்மேல் இறத்தல் திண்ணம்
என்னும் உண்மையை மனத்திற் கொண்டு
அமைதி அடைந்து அமரரின் ஆத்மா
சாந்தி அடைக என்றே நினைந்து
ஓம்சாந்தி சாந்தி சாந்தி அடைவோம்.

## மனைவி பிரலாபம்

அன்புக்கோர் உறைவிடமே எந்தன் நாதா
அகலாது எனையென்றும் காத்தாய் ஐயா
என்பெல்லாம் உருகிநிதம் வாடு கின்றேன்
எங்கேநீர் சென்றீரோ இயம்பு வீரே
துன்புற்று நான் வாழ்வில் இருந்த தில்லை.
தூயவரே எந்தனது பிராண ஈசா
வன்புற்று எனைவிடுத்து செல்ல ஏனோ
மனம்வந்த தெடுத்தியம்ப யார்தா னுள்ளார்.

## மூத்தமகள் பிரலாபம்

அப்பாவே எங்களது அருமைத் தந்தாய்
அருகிருந்து இனியமொழி பேசும் தெய்வம்
இப்பாரில் எமக்கினியார் துணையும் உள்ளார்
ஏனப்பா எமைவிடுத்து ஏகி விட்டீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்போதும் இறைவனையே தொழுது நிற்பீர்.
முதிய பல கதை பேசி மகிழச் செய்வீர்
தப்பாது பல கடமை புரிந்து பாரில்
தகவுடனே வாழவைத்த தெய்வ மன்றோ

மூத்தமகன் பிரலாபம்

என்னையுமே பெரியவனாய் ஆக்க எண்ணி
இந்தியா கொண்டு சென்று படிக்க வைத்தீர்
பன்னரிய துயரிப்போ தந்து விட்டீர்
பண்புடைய அப்பாவே காண்ப தெப்போ
உண்ணுதற்கும் மனம் நோகும் உருகின்றேன்
உங்களது அருகிருக்கக் கொடுத்தே னில்லை.
என்னரிய தந்தைக்கு யமனும் செய்த
இடுக்கண்தான் மிகக் கொடிது கொடிதேயன்றோ.

இரண்டாவது மகன் பிரலாபம்

பாலகனாய் நானிருந்து படிக்கும் போது
பதைபதைக்கும் கொடுமையினைத் தாங்குவேனோ
நானொருவன் தனியிருந்து நலிய லாமோ
நண்ணுதற்குத் துணையில்லை எங்கள் அப்பா
பாதகனாம் அந்தகனின் கொடுமை யாலே
பதைக்கின்றோம் எங்களுக்குத் துணையும் இல்லை,
யாதுமொரு செயலறியோம் யாருமில்லை
நானிலத்தில் உங்களைநாம் காண்பதெப்போ.

இரண்டாவது மகள் பிரலாபம்

அப்பா நான் உங்களது செல்லப் பிள்ளை
அன்புடனே மடிமீது இருத்திக் கொள்வீர்
தப்பேதும் நான்செய்தால் தண்டிக் காது
தகவுடனே கதைகள்பல சொல்லிக் கொள்வீர்
இப்போது எமைவிடுத்து எங்கு சென்றீர்
ஏங்குகின்றோம் தேடுகின்றோம் எங்க ளப்பா
செப்பாது ஐயாநீர் சென்று விட்டீர்
தெய்வமே உன்செயலைத் தாங்க மாட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமயனார் பிரலாபம்

அன்பான எந்தனது அருமைத் தம்பி
அருகிருந்து என்னோடு கதைகள் சொல்வாய்
பண்போடு எனையணுகும் பாங்கை எண்ணிப்
பதைத்துருகி அழுகின்றேன் பாராயோ நீ
அண்ணாவே என்றொருக்கால் நீதான் சொன்னால்
அன்புருகிப் பெருகிடுமே அவனி மீது
மின்னாமல் முழங்காமல் யமனும் உன்னை
மீளாத துயிலுக்கு அழைத்துச் சென்றான்.

## தங்கை பிரலாபம்

அண்ணாவே எங்களது குலத்தின் குன்றே
அவனியிலே உமைப்பிரிந்து ஆற்ற மாட்டோம்
புண்ணாக நெஞ்செல்லாம் உருகு தையோ
புலம்புவது தவிர்ந்திடநாம் யாது செய்வோம்
கண்ணாக எமைக் காத்தீர் கடமை செய்தீர்
கருதரிய செயல்கள்பல எமக்குச் செய்தீர்
எண்ணாமல் நாமிருக்க யமனு மும்மை
ஏனழைத்தான் எங்களது இனிய அண்ணா.

## உற்றார், உறவினர், நண்பர் பிரலாபம்

கண்டவுடன் உபசரித்துக் கதையும் கூறிக்
கனிவுடனே எமையணைத்த கரங்கள் எங்கே
விண்ணரசு ஆளுதற்குச் சென்றீரோ நீர்
விட்டகல மனமில்லை விசன முற்றோம்
பண்ணுடனே தேவாரம் பாடி நிற்பீர்
பகரரிய புராண மிதிகாசம் சொல்வீர்
நண்ணிடுவீர் தெய்வபதம் நாளு மென்று
நாமிரண்டு கரம்கூப்பித் தொழுது நின்றோம்.

## தேற்றம்

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—நீண்டபுகழ்
தேவதாசப் பெரியோன் சென்றார் சிவலோகம்
நாமதனை நாளும் நினைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும், பண்பும் நிறைந்த எமது அருமை அப்பா

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

கரை காணாத வாழ்க்கையின் கலங்கரை விளக்குப் போல் காலமெல்லாம் எமக்கு வழிகாட்டி கல்வி எனும் செல்வத்தை கவனமுடன் ஊட்டி கண்மணி போல் எமையெல்லாம் காத்து கனிவான மொழியாலே எமை ஆண்ட எமதருமை அப்பாவே, கதிரவனின் ஒளியைப் போல் களங்கமற்ற உம் அறிவொளியால் பெருமையுற்ற நாமெல்லாம் உம் நினைவை என்றும் எம் மனத்திரையில் இருத்தி வைப்போம் அப்பா.

அப்பா! நீங்கள் உங்கள் அன்புக்குழந்தைகளான எங்கள் நால்வரின் மேலும் வித்தியாசம் இன்றி அன்பு செலுத்துவீர்களே! அப்பா நீங்கள் அதட்டிப் பேசியதை நாம் கேட்டதில்லை. கைநீட்டி அடித்ததையும் நாம் கண்டதில்லை. நாம் ஏதும் தவறு செய்தால் உங்கள் கனிவான பார்வையாலே உணர்த்துவீர்களே! நீங்கள் எவ்வளவு அன்பானவர் அப்பா!

சிறு வயதிலேயே எமக்கு இறை உணர்வை ஊட்டினீர்கள். சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடன் என்பதற்கிணங்க அவையத்து முந்தி இருப்பச் செய்தல் தன் கடன் என்று எமது கல்விக்காக அரும்பாடு பட்டீர்களே அப்பா நீங்கள் எங்கள் உயர்ச்சிக்காக அல்லும், பகலும் அயராது பாடுபட்டு கண்ணை இமை காப்பது போல் எமைக் காத்து வளர்த்தீர்கள் எமது உயர்நிலைகளைக் கண்டு, இன்புற்று சுவைக்க முன்னர் எங்கே சென்றீர்கள் அப்பா! நீங்கள் எங்கள் மேல் கொண்ட பாசமும், பற்றும் இறைவனுக்குத் தான் பிடிக்கவில்லையோ?

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே" என்று கூறி தமிழுக்குப் பணியாற்றினீர்கள். அப் பணியை தொடராமல் பாதியிலே சென்றீர்களே அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் எந்தச் செயலை எடுத்தாலும், மிகவும் நிதானமாகவும், சிந்தித்தும் செய்வீர்கள். எல்லோருக்கும் முன்னோடியாகவும், வழி காட்டியாகவும் விளங்கினீர்கள். அப்பா உங்கள் அன்பையும் நீங்கள் எங்களின் உயர்ச்சிக்காக பட்ட கஸ்டங்களையும் சொற்களில் பொறிக்க முடியாது.

அப்பா! உங்களுக்கு பிள்ளைகளாகப் பிறப்பதற்கு நாம் என்ன தவம் செய்தோம். எமக்கு நல்ல அன்பான அப்பாவைத் தந்த இறைவன் இடையில் தன்னிடம் அழைத்துக் கொண்டு விட்டான். அமைதியும், சாந்தமும், பொறுமையும், எழிலும் கொண்ட அப்பா இனி எப்பிறப்பில் உங்கள் திருமுகம் காண்போம்.

மற்றவர்கள் மதிக்கும் மாண்புறு வாழ்வு காட்டி அன்பெனும் கடல் அலையை அள்ளி வீசி என்றும் இன்பமுடன் முகமலர்ந்து இன்னல் பல களைந்து விட்ட அப்பாவே. நின் நினைவுகள் என்றென்றும் எம் நெஞ்சை விட்டு நீங்காது. நீங்கள் காட்டிய பாதையில் வாழ்ந்து, உங்களுடைய இலட்சியங்களை நிறைவு செய்வோம்.

இறைவன் திருவடியில் தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் அன்புச் செல்வங்களான

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு அமைந்தது அவ்வளவு தான்

கனகசுந்தரம் தேவதாசன் ஆசிரியர் மின்னாமல் முழங்காமல், மரண வேதனையின்றி திடீர் என்று நம் எல்லோரையும் ஆழத் துயரத்தில் மூழ்க வைத்து இறைவனடி யெய்தி விட்டார். அன்னாரின் துக்ககரமான செய்தி அறிந்து நாம் அனைவரும் பெரும் துயரமடைந்தோம்.

அன்னார் ஒரு சிவபக்தன், தனது கடமையில் கண்ணும், கருத்துமாக நடந்து கொள்பவர், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை கடைப்பிடிக்கும் ஒரு சிறந்த ஆசிரியர். அத்துடன் ஒரு சமய சொற்பொழிவாளரும் கூட.

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர். மகோற்சவ காலங்களில் தவறாது குடும்பத்துடன் விரதமனுஷ்டித்து வழிபடும் வழக்கமுள்ளவர். கீரிமலை சிவநெறி கழகம் நடாத்தி வந்த சமய அறிவு போட்டிகளில் மத்தியஸ்தராக இருந்து போட்டிகளை சிறப்புற நடாத்தி வந்தார். குருபக்தி, தெய்வ பக்தி ஆகியவற்றில் வெகு நம்பிக்கை கொண்டவர்.

மரணம் என்பது பிறப்பிலன்றே எழுதப்பட்டு விட்டது. அதை யாராலும் தடுக்க முடியாது. எனவே அன்னாரின் மறைவையிட்டு ஆழாத்துயரத்தில் மூழ்கியிருக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர் எல்லோரும் இறைவன் விட்ட வழியென்று மனம் சாந்தியடைந்து அன்னாரின் ஆத்மா நகுலேஸ்வரப் பெருமானின் பாதங்களை அடைந்து சாந்தி பெற நாம் அனைவரும் நகுலேஸ்வரப் பெருமானை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி

சிவஸ்ரீ க. நகுலேஸ்வரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திதி நிர்ணய வெண்பா

சீர்திகழும் யுவவருடம் சிறந்த சித்திரைத் திங்கள்
பார்புகழும் பூர்வபக்க ஏகாதசியாம் தேசுடைய
வீசுபுகழ் தொல்புரத் தாசான் தேவதாசனார்
ஈசனடி சேர்ந்த திதி காண்.

ஆக்கம்: அருட்கவி வேலணை வேணியன்

# நல்லாசான் தேவதாசனார்

ஈழத் திருநாட்டின் வடபுலத்து தொல்புரமூர், தொல்புரம் புகழ்பூத்த பல அறிஞர்களை உருவாக்கிய சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அமைந்துள்ள அயல் ஊர் என்று சொல்லும்போது அது தனிப் பெரும் பெருமை முன்னோடியான செல்வந்தர்களையும், விவசாயப் பெருமக்களையும் கொண்ட சிறந்த கிராமம். இங்கே மதிப்பு மிக்க திரு. கனகசுந்தர முதலியார் பரம்பரையில் வந்த சங்கானை கிராமசபை விசுதர் அமரர் திரு. கனகசுந்தரம் திருமதி கனகசுந்தரம் அவர்கள் தம் சற்புத்திரனே அமரர் ஓய்வுபெற்ற நல்லாசான் திரு. தேவதாசன். இவர் தம் தாயார் திரு. தளையரத்தின முதலி செங்காரபிள்ளை உடையார் வழித்தோன்றலில் உதித்தவர் என்றால் இன்னும் சொல்லவும் வேண்டுமா?

அமரர் தேவதாசனார் சிறந்த ஊரே போற்றிய உத்தமச் சைவன், சுழிபுரம் விக்டோரியா கல்லூரிப் பழைய மாணவர். தமிழகத்தில் கிழக்காசியப் பட்டதாரியாகத் தன் கல்வியை முடித்து வந்த பெருமையும் இவருக்கு உண்டு. (Bachelar of Oriental Literature)

நாடு போற்றும் நல்லாசான் எனும் பெயரையும் ஈட்டிக்கொண்டார். சிறந்த தமிழ் அறிவு நிறையப் பெற்றுக்கொண்டவர். அதன் பலனாகத் தன் மாணாக்கர்களையும் தமிழறிவு நிறையப் பெறத் துணை நின்றார் என்றால் அது மிகையாகாது.

பண்ணோடு இசையமைத்துத் தேவார பாராயணங்களைத் தற்காலத்தில் காண்பது அரிது. தமிழைத் தமிழகத்தில் கற்றுக் கொண்ட வித்துவத் தன்மையால் இசையுடன் பண்ணிசைத்துத் தேவார திருவாசகங்களையும் பாடி இறைவனைப் பரவும் திறமையும் மிக அதிகம் பெற்றிருந்தார் என்றதால் அது இறை திருவருட் கொடையே.

இவருக்கு அதிபிடித்த திருத்தலங்கள் ஊரில் மூன்று. ஒன்று மூளாய் பிள்ளையார் ஆலயம். மற்றது புன்னாலை கிருஷ்ண பகவான் ஆலயம். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம். இத்திருத்தல நித்திய வழிபாடு இவருக்குச் சீரும் சிறப்புமான குடும்ப மனமகிழ்ச்சி நிறைவைக் கொடுத்தது என்றால் அது மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது துணைவியார் திருமதி கமலாதேவி கலாநிதி பொன்னம்பலம் அவர்கள் மகள் என்றால் சொல்லவும் வேண்டுமா? அதன் சிறப்பின் பெருமைதனை இவர் தமக்கு நான்கு குழந்தைகள் செல்வி தேவசுந்தரி செல்வன் வசந்தகுமார், செல்வன் சுவர்ணகுமார், செல்வி தேவகி இல்லத்தின் பெருமை இணையற்ற பெருமை வரலாறு என்பதை இவை நிரூபிக்கின்றன.

அத்தோடு இவர் மிகவும் புகழ்பெற்ற அமரர் பிரதி பொலிஸ்மா அதிபர் பொன் இராஜேஸ்வரனின் மைத்துனரும், காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய திரு. K. பாலகிருஷ்ணனின் இளைய சகோதரனும், திருமதி இராஸ்வரனின் மூத்த சகோதரனும் ஆவார் என்றால் மிகையாகாது.

அமரர் இவர்தாம் புனித தோமையார் (St. Thomas) கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம், வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாலயம், சித்தங்கேணி திருநாவுக்கரசர் வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளிலும் இறுதியில் சிறந்த ஆங்கில ஆசானாகச் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் ஆங்கில ஆசானாக இருந்து ஓய்வு பெற்றார்.

சிறந்த இனப்பற்றுடைய சமூக சேவகர், சிறந்த இல்லறத் தலைவன், இறைபணித் தொண்டர் என்று இப்படியே இவர் தம் பெருமையைக் கூறிக்கொண்டே போகலாம்.

அமரர் தேவதாசன் அவர்கள் இலைமறை காய்போல இருந்ததினால் அன்றோ அன்னாரின் அறிவுக் களஞ்சியத்தை, மற்றவர்கள் உணர முடியாது போயிற்று.

இன்னும் பலகாலம் வாழ்ந்து தமிழ் மக்களுக்கும் குறிப்பாகத் தன் குடும்பத்துக்கும் சேவையும், துணையுமாக இருக்கவேண்டிய உத்தமர் தம் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

எம்மால் செய்யக்கூடிய கைமாறு ஒன்றே ஒன்று அன்னார் தம் ஆத்மா சாந்திக்காக இறைவன் திருப்பாதங்களைக் கண்ணீரோடு தொழுது பணிவதேயாகும். அறிவைப் புகட்டி அறுபது ஆண்டுகள் இப்பூவுலகில் வாழ்ந்து மறைந்த பெரியார் புகழ் என்றும் தமிழர்கள் எம் மத்தியில் நிலைக்கட்டும், எனவும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்பன்
நவாலியூர்
ந. சந்திரசேகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய தமிழ்ப் பண்பாளன்

என் இனிய நண்பர் திரு. க. தேவதாசன் அவர்கள் திடீர் மறைவு கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் திரு. க. தேவதாசன் அவர்களும் படித்துக் கொண்டிருந்தார். அவர் உண்மையில் B. O. L. பாட நெறியைப் பயின்றது மட்டுமல்லாது தமிழ்ப் பண்புடன் செயற்பட்டார். இவர் வெளிநாட்டு மாணவர் சங்க செயலாளராகவும் இருந்தார். அவர் அனைவருடனும் இனிமையாகப் பழகியவர். அவர் கதைக்கும்போது அனைவருடனும் அன்பாகக் கதைப்பார். எவரையும் குறை கூற மாட்டார். உண்மைக்கும் நியாயத்திற்கும் தான் அவர் எப்போதும் செயற்பட்டவர். நல்ல பண்புள்ள ஓர் அதிகாரி. சிறந்த ஆசிரியர். அவர் எம்மை விட்டுப் பிரிந்தது உண்மையில் பெரிய இழப்பாகும். அவரைப் பிரிந்து ஆழ்ந்த துக்கத்திலுள்ள அவரின் குடும்பத்தவர்க்கு எமது ஆறுதல் வார்த்தைகள் உரியதாகும். அவர்கள் சிறப்புடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

க. ஜெயரட்ணம் M. Com.
அதிபர்
தொழில்நுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நினைவில் அகலாதவர்

நண்பர் திரு. க. தேவதாசன் அவர்கள் எனது பாடசாலைக் காலத்தில் இருந்து நன்கு பழகியவர். அன்னார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பட்டப்படிப்பை மேற்கொண்ட காலத்தில் தான் சங்கீத பூஷணப் பட்டப் படிப்பில் ஈடுபட்டிருந்தேன். அக் காலம் நாம் அயலூரவர்கள் என்ற முறையிலும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிப் பழைய மாணவர்கள் என்ற முறையிலும் மிக நெருக்கமுடையவர்களாயிருந்தோம். மீண்டும் ஆசிரியர்களாயிருந்த காலத்திலும் பல்கலைக்கழக வாழ்க்கையைப் பற்றிப் பேசி மகிழ்வோம்.

எந்நேரமும் முக மலர்ச்சியுடன் காணப்படும் நண்பர் அமைதியாகவே எப்பொழுதும் இருப்பார் இடம் பெயர்ந்து வடமராட்சியில் இருந்த போதும் அடிக்கடி சந்தித்தோம். ஊருக்குத் திரும்பி எனது நண்பர் ஒருவர் வீட்டிற்குச் சென்ற சமயம் இவரது மரணச் செய்தி கேட்டு வியப்பும், அதிர்ச்சியும் அடைந்தேன்.

நல்ல குடும்பம் இவரது சிறப்பான வாழ்க்கை யாவற்றையும் அறிந்த நான், இவரது பிரிவைத் தாங்க இயலாதவனாக உள்ளேன். எனினும் பிணி, மூப்பு, சா என்னும் நியதியிலிருந்து எவரும் தப்பி விட முடியாது. இதனை நமது தமிழ் பெரியோர்களும் ஞானிகளும் எமக்கு அறியத் தந்துள்ளனர். இந்த அறிவுரைகளை விளங்கி நாமும் எவருக்கும் தொல்லையோ, துன்பமோ கொடுக்காது, வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டுமென்பதை மனத்திற் கொண்டு இப்பெரியாரின் குண நலன்களை பின்பற்றி வாழ்வோமாக.

இவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் இக்குடும்பத் தலைவரது வழியில் நின்று வாழ்வின் சகல சிறப்புகளையும் பெற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னபடி வாழ்ந்த தூயோன்

அமரர் கனகசுந்தரம் தேவதாசன் அவர்களின் சொல்லையும் செயலையும் நான் நன்கு அறிந்துள்ளேன். சொல்வது போலவே வாழ்ந்தும் காட்டிய தூயவர் இவர்.

இவரது தந்தையார் இவரைப் படிப்பித்துச் சிறந்த தமிழறிஞனாக்கிச் சான்றோர் மதிக்க வாழச் செய்ய வேண்டும் என்னும் அவா உடையவராயிருந்தார். தந்தையின் எண்ணத்தை அமரர் தேவதாசன் நிறைவாக்கி நாடும், ஏடும் போற்றும் நல்லறிஞனாகி வட்டுக்கோட்டைத் தொகுதித் ''தமிழறிஞர் சரித்திரத்தில்'' இடம் பெற்ற சான்றோனாகத் திகழ்கிறார்.

சித்தங்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் ஞாயிற்றுக் கிழமை தோறும் பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்கு பற்றி நற்சிந்தனை வழங்குவார். நல்ல சமயக் கருத்துக்களைத் தெளிவாகவும், சுவையாகவும் எடுத்துக்கூறி அங்கு சமுகமாயிருப்பவர்களின் நன்மதிப்பைப் பெற்று அவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளார்.

புராண படன வேளையில் படித்தும், பயன் சொல்லியும் கேட்பவர்களைப் பரவசத்தில் ஆழ்த்துவார். ஆழமான புராணக் கருத்துக்களை எல்லாம் பக்தி பரவசமான இசையுடன் சுவை பட இலகு நடையில் சொல்லி மெய்ம்மறக்க வைப்பார்.

இவருடைய நற்சிந்தனையிலும், புராண படனத்திலும் ஈடுபட்டுப் பெரும் பயன் பெற்றவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் சொன்னபடி வாழ்ந்த தூயவன் ஆகிய அமரர் தேவதாசனின் ஆன்மா சிவபெருமான் திருவடிக்கீழ் இன்புற்றிருக்க இறைஞ்சுகின்றேன்.


எம். கே. சுப்பிரமணியம்

நிதி நிலையம்

வழக்கறிஞர்

சிவசிதம்பரேஸ்வரர் ஆலய

பரிபாலன சபை தலைவர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய உலகின் ஒளிவிளக்கு

சைவமும் தமிழும் மேலோங்க அல்லும் பகலும் அயராது உழைத்த க. தேவதாசன் B. O. L. அவர்களின் திடீர் மறைவு கேட்டு நாம் பேரதிர்ச்சியுற்றோம். ஆசிரிய உலகின் ஒளிவிளக்காகவும், ஆசிரியத்துவத்தின் முன்னோடியாகவும் திகழ்ந்த ஒரு தலைசிறந்த ஆசானாவார். மாணவ சமுதாயத்தின் அறியாமை இருளை அகற்றி அறிவொளி பாய்ச்சி ஓர் அறநெறிப்பட்ட, நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பயன்படக்கூடிய ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு இவரது பணி மிகவும் பயன்பட்டது. இவரது வாழ்க்கை முறை, செயற்பாடுகள் யாவும் மாணவர்களுக்குச் சிறந்த பின்பற்றலாக அமைந்தது.

சைவ சமயத்தின் தூய்மையான ஒழுக்கங்களைச் சைவ உலகம் அறிய வேண்டும் என்ற பெரு நோக்குடன் ஆலயங்கள் தோறும் சென்று கதாப்பிரசங்கங்கள் செய்து மக்களின் தூய சிந்தனைக்கும், தூய வாழ்வுக்கும் வழி சமைத்த பெருமை இவருக்குண்டு.

இவரது பணிவான பேச்சும், அமைதியான போக்கும், ஆழ்ந்த அறிவும், சிறந்த ஆலோசனைகளும், கற்பிக்கும் திறனும் எமது ஆசிரிய உலகிற்கு சிறந்த பொக்கிஷங்கள் ஆகும்.

இத்தகைய பெரியார் இன்று எம் மத்தியில் இல்லாவிட்டாலும் அவரது சிந்தனை அலைகள் இன்றும் எம் உள்ளத்தில் நிலைத்து நிற்கின்றன. அவரது இழப்பால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/வட்டு திருஞானசம்பந்த
வித்தியாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ளம் கொண்ட ஆசிரியப் பெருந்தகை

அமரர் கனகசுந்தரம் தேவதாசன் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். எமது கல்லூரியின் சிறந்த பழைய மாணவர்களில் ஒருவராகவும், தமது ஓய்விற்குப் பின்னர் பகுதி நேர ஆங்கில ஆசிரியராகவும் பெருஞ் சேவை புரிந்த அன்னாரின் மறைவு எமக்குப் பெரும் கவலையைத் தருகின்றது.

எமது பிரதேச பாடசாலைகள் பலவற்றில் சிறந்த ஆசிரியராகப் பணியாற்றி அறிவுச்சுடரை ஒளிர வைத்தார்கள். தமது சேவையின் இறுதியில் தான் கற்ற கல்லூரியில் ஆங்கில ஆசானாக பணியாற்றும்போது அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அன்புள்ளம் கொண்டவர், கடமையைக் கண்ணாகப் போற்றியவர். தமிழும் சைவமும் வளர்ந்தோங்க அரும் பணி ஆற்றியவர். எமது கல்லூரி பிரார்த்தனைக் கூட்டங்களிலும், விசேட சமய நிகழ்ச்சிகளிலும் சமயப் பேருரைகளை ஆற்றியதன் மூலம் மாணவர்களின் சமய ஈடுபாட்டிற்கும், அறிவு வளர்ச்சிக்கும் அரும் பணியாற்றியுள்ளார்கள். ஆலயங்களில் அவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள் பலராலும் பாராட்டப்பட்டவையாகும். அன்னாரின் இழப்பு எமக்கெல்லாம் பேரிழப்பாகும். அவரை இழந்து நிற்கும் அன்னாரது குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நடேசப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

கா. சந்திரபாலன்
அதிபர்
விக்டோரியாக் கல்லூரி
சுழிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அடைக சாந்தி

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களுள் ஒருவரான திரு. கனகசுந்தரம் தேவதாசன் B.O.L. அவர்கள் அமரராகிவிட்டார் என்னும் செய்தி என்னைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

சிறந்த கல்விமானும் நிறைந்த பண்பாளனும் அயராத சமயத் தொண்டனுமான அமரர் தேவதாசன் தமது பெற்றோர் சகோதரருக்கும் மனைவி மக்களுக்கும் உற்றார் உறவினருக்கும் மிக வேண்டியவராக வாழ்ந்து வந்தவர். தாம் கற்ற வித்தியாசாலைகளுக்கும் தாம் கற்பித்த பாடசாலைகளுக்கும் பெருமை தேடிக் கொடுத்தவர். வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராக அங்கம் வகித்து அச்சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்தார்.

கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பண்டித பால பண்டித பிரவேச பண்டித வகுப்புக்களில் எங்கள் சங்கத்தின் சார்பில் கற்பித்தார். புராண இதிகாசங்களையும் சைவத் திருமுறைகளையும் போற்றி வாழ்ந்து தமது வாழ்க்கையைச் செந்நெறிப்படுத்திய அமரரின் வாழ்வு பெருமையுடையது.

அமைதியான போக்கும் அருமையான குணமும் கொண்ட அமரர் தமது இல்லற வாழ்வில் தம் மக்கட் செல்வங்களைக் கண்ணெனப் போற்றி அவர்தம் உயர்கல்விக்கு வித்திட்டவர். அவற்றின் விளைவைக் கண்டு இன்புறும் சந்தர்ப்பத்தில் காலன் தனது கொடிய பார்வையை அவர் மீது செலுத்திவிட்டான்.

அவரை இழந்து துயருறும் மனைவி மக்களுக்கும் சகோதரர்களுக்கும் ஆண்டவன் ஆறுதல் அளிக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக. வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்கத்தின் எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் செலுத்திக் கொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி!

**பண்டிதை பொன். பாக்கியம்**
வட்டுக்கோட்டைத் தொகுதி
தமிழ் சங்கப் பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்புடைச் செல்வர்

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய கனகசுந்தரம் தேவதாசன் அவர்கள் இறந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு அவரைச் சந்தித்த போது மிக ஆரோக்கியமான நிலையில் இருந்தார். என்னுடன் நன்றாகச் சிரித்து மகிழ்ச்சித்தும் கதைத்த காட்சி எனது மனதில் இன்னும் பசுமையாகத் தெரிகிறது.

இவர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மிகச் சிறந்த தமிழ்ப் பேரறிஞர்களிடம் தமிழை மரபு தவறாமல் கற்றார். இதன் பேறாய் சிறந்த தமிழ்ப் பேரறிஞராய் விளங்கினார். இவர் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தில் நிர்வாக உறுப்பினராக இருந்து பல நல்ல ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி சங்க வளர்ச்சிக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் உறுதுணை புரிந்தார்.

இவர் சிறந்த தமிழறிஞராக மாத்திரமன்றி சைவ நூல் அறிவில் சிறந்து விளங்கியதோடு சமய நுண் கருத்துக்களையும் எடுத்துக் கூறி வந்தார். சிறந்த கடவுள் பக்தி உடையவராயும், சமய நெறிகளில் தவறாதவராயும் விளங்கினார். தன்னாலியன்ற சமயப் பணிகள் செய்வதில் எக்காலமும் தவறினார் அல்லர்.

இவர் எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் இனிய குணம் நிறைந்து விளங்கி எல்லாருடைய நன்மதிப்புக்குமுரியவரானார். இவருடைய மறைவு தமிழ் உலகிற்கும், சைவ உலகிற்கும் பேரிழப்பாகும். அவருடைய மறைவினால் துயரில் ஆழ்ந்திருக்கும் மனைவி, மக்கள், சுற்றத்தார் அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் மனச்சாந்தியைக் கொடுப்பாராக.

இங்ஙனம்

**பண்டிதர் ப. இராசகுரு**
நொத்தாரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் பொய்யாதொழுகிய உத்தமர்

—★—

''உவப்பத் தலை கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்''

வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிவகைகளை வகுத்து உல கிற்களித்த வள்ளுவரின் மேற்குறித்த குறளின் பொருளை ஆழ்ந்து சிந்திக்கும்போது அண்மையில் அமரத்துவம் அடைந்த எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய நண்பர் உயர்திரு. கனகசுந்தரம் தேவதாசன் அவர்களின் நினைவலைகள் தான் எனது மனத்திரையில் விழுகின்றது. அவர் இவறவனடி அடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கூட நாமிருவரும் மிக நீண்ட நேரமாகச் சமயம், இலக்கியம் பற்றிக் கலந்துரையாடிய அந்தப் பசுமையான நினைவுகள், அவர் இறந்துவிட்டார் என்ற செய்தியினை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. அந்தளவிற்கு நாமிருவரும் எப்பொழுதெல்லாம் சந்திப்போமோ அப்பொழுதெல்லாம் சைவத்திருமுறைகள் போன்ற இலக்கியங்கள் பற்றியும் விசேடமாகச் சமய உண்மைகளை எளிதில் விளக்கும் சொற்பொழிவுகளைப் பற்றியும் மிக நீண்ட நேரமாக நேரம் போவதே தெரியாமல் கலந்துரையாடுவோம்.

அமரர் திரு. க. தேவதாசன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக B.O.L. பட்டதாரி ஆசிரியரான அவர் பொதுவாக இலக்கியத்திலும் சிறப்பாக சைவம் சார்ந்த இலக்கியங்களிலும் ஆழ்ந்த புலமையும், மிகுந்த ஈடுபாடும் உடையவர். அத்துடன் கேட்டார்ப் பிணிக்கும் வகையில் அவை பற்றி விளக்கும் சொற்பொழிவுத்திறனும் மிக்கவர். எமது அயற்கிராமமான தொல்புரத்தைச் சேர்ந்தவரென்ற வகையில் அவரை மிக நீண்ட காலமாகத் தெரியுமெனினும் வித்தியாசாலையில் ஆசிரியராக பணிபுரிந்த காலத்திலிருந்தே அவருடன் மிக நெருக்கமாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவரின் அறிவு, ஆளுமை, எண்ணம் என்பன மிக உயர்வானவையாகவும், சமுதாயத்திற்கு ஏதோ ஒரு வகையிலாவது பயன்பட வேண்டுமென்ற நோக்கிலும் அவை அமைந்திருந்தமையினை அவதானிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைநகர் நாவலர் தனது சொற்பொழிவுத் திறனால் சைவத்தையும், எழுத்துத் திறனால் தமிழையும் தரணியெங்கும் தழைக்கச் செய்தவர் என்று நாவலரை அடிக்கடி நினைவுகூரும் திரு. தேவதாசன் அவர்கள் நாவலர் வழியில் சைவம் வளரச் சொற்பொழிவுகளை ஒரு உந்து சக்தியாக அமைய வேண்டுமென அழுத்திக் கூறுவார். எமது சமய பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் – பேணப்பட வேண்டும் – வளர்க்கப்பட வேண்டுமென அவர் அடிக்கடி கூறும் உணர்வு பூர்வமான வார்த்தைகள் நெஞ்சிருக்கும் வரை அவர் நினைவுகளை நிலைத்திருக்கச் செய்வன.

''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துளெல்லாம் உளன்''

என்ற குரலுக்கு இலக்கணமாக நிலமிசை நீடு வாழ்ந்த அமரரின் ஆத்மா ஆடல் வல்லானின் அடியில் சேர அவனைப் பிரார்த்திப்போமாக!

சாந்தி!

திரு. மு. க. மாசிலாமணி B. A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " நெறிமுறை நின்ற நல்லோன் "

1. கெழுதகை நண்பர் யார்க்கும் கேடிலாத் தேவதாசன்
தொழுதநற் சிவன் கழற்கே சேர்ந்தனர் எனக் கேட்டன்பன்
விழுமிய அறிவும் பண்பும் வியன் பெரு வாழ்வும் சீரும்
பழுதிலாப் படமேபோலப் படர்ந்தன மனக்கண் முன்னே.

2. தொல்புரக்கிழார் கனகசுந்தரத் தோன்றல் மைந்தன்
தொல்புகழ்ப் பெருமை நாட்டும் தூய நம் தேவதாசன்
தொல்லுயர் அண்ணாமலையிற் பல்கலைக்கழகம் சேர்ந்து
பல் பெரும் பேரறிஞர் பார்வையிற் பயின்று தேறி.

3. வெளிநாட்டு மாணாக்கர்தம் விழுமிய சழகம் தன்னில்
வழிகாட்டும் செயலனாகி வளஞ்செறி விழாக்கள் கண்டு
ஒளிதிகழ் அறிஞனாகி உத்தமர் உவந்து போற்ற
களி மகிழ் சிறப்பில் பீ.ஓ.எல். பட்டத்தின் பெருமை பெற்றே.

4. கல்விசொல் வித்தை தேறிக் கடவுளர் பணியேயென்ன
நல்லாசான் பணிமேற் கொண்டு நாற்றிசை போற்றும் ஆற்றல்
வல்ல பேச்சாளன் சொற்போர் வன்மையிற் பெரியன் கற்றோர்
சொல்லு நற் புகழில் மிக்கோன் தூய சிந்தனையில் மேலோன்.

5. இளவாலை மெய்கண்டானில் உயர்கல்விப் பொறுப்பையேற்று
உளமாரப் பணிமேற்கொண்டு உயர்வுகள் பலவும் காட்டி
வளமான ஒன்றுகூடல் முதற்பல விழா நடாத்தி
அளவில் பன்முகப்பணிகள் ஆற்றியே சிறந்து நின்றார்.

6. துறை தோய்ந்த தமிழ்ப்புலமை தூய நற்சைவச் சால்பு
மறைமுதல் ஆகமங்கள் மாற்றுயர் திருமுறைகள்
நிறைவாக வுணர்ந்து நீதி நெறிமுறை நின்ற நல்லோன்
குறைவறு பண்பில் சான்றோர் கொள்கையின் குன்றாய்
நின்றோன்.

7. மெய்கண்டான் தேடித்தந்த மேதகு நல்லாசானாய்
மெய்கண்டு மெய்புரைக்கும் மேனிலைச் சொல்லாசானாய்
மெய்புணர் வுணர்த்தி வாழ்ந்த மேன்மைகொள் வாழ்வாசானாய்
மெய்யினைப் பொய்யாய்விட்டு மெய்ப்பதம் மேவினானே.

சைவப்புலவர் சு. செல்லத்துரை
அதிபர்
இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
இளவாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Brother Sivam,

We were greatly shocked and grieved when we received the news of sudden demise of brother K. Thevethasan or Sivam, as he is fondly called. One can therefore well imagine the state of mind of his beloved wife and loving children when such a tragedy happened so suddenly.

Brother Sivam was a great soul who was always ready to help his kith and kin in any situation and his absence will be greatly felt by one and all of us. His courteous and kind ways exemplifies the prophetic saying "Anbe Sivam" அன்பே சிவம். It is only the mortal body that has past away while his soul I am sure will attain mokşham as he was a person who did not harm any body.

We hope and pray that his son graduating in India, as the father did, will follow the fathers footsteps and fill the vaccum created by the demise of his father.

I am confident that god would comfort the family and give them the courage to face and over come this sorrowful period. It is often said that there is a silver line in every dark cloud.

May his soul attain Moksham

**Dr. Mrs. T. Saravanapavananthan.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்திகள்

என்றும் எங்கள் குடும்பத்தில் மதிப்புக்குரியவரும் அன்புக்குரிய வரும் ஆகிய சிவம் அத்தானை இழந்துவிட்டோம் என்ற செய்தி எங்கள் எல்லோரையும் அதிர்ச்சியிலும், ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த் தியுள்ளது: உடல் அழியலாம்; உயிர் பிரியலாம்! ஆனால் அன்னாரின் அன்பும், பண்பும் எங்களைவிட்டு என்றும் பிரியா எங்கள் அம்மாவை தனது தாய் போன்று தேவையான வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து நோய்வாய்ப்பட்டு இருக்கும் சமயங்களில் தனது இன்னல் களைப் பாராது மருத்துவ உதவிகளைப் பெற்றுக் கொடுத்து வந்தார். இவரின் தர்மச்செயல் என்றும் எங்களால் மறந்துவிடமுடியாது. எங்களை என்றும் பெரிய மச்சான் அப்பர், அருள், ராசன், துரையர், மச்சான்மார் என்று மென் குரலில் அன்பாக அழைப்பார். எச்சந்தர்ப் பத்திலும் தன்னிலை தழும்பாது மற்றவர்களை புண்படுத்தும் வார்த் தைகளை உபயோகிக்க மாட்டார். தனது உடல்நலக்குறைவையும் பொருட்படுத்தாது எத்தனை, எத்தனை கஷ்டங்கள்! ஆபத்துக்கள் எதிர்நோக்கினும் தனது குடும்பத்திற்கு அச்சாணியாக நின்று ஆதரவு வழங்கித் தேவைகளைப் பூர்த்தி செய்து தனது இரு ஆண் மகனையும் இரு பெண் பிள்ளைகளையும் வாழ்வில் மேம்படுத்தி உயர் வாழ்வை அடையவேண்டும் என்ற குறிக்கோள் கொண்டு அரும்பாடுபட்டார். தனது இல்லத்திற்கு வருபவர்களை இன் முகத்துடன் உபசரித்து விருந்தும் அளிப்பார். மாற்றார் இல்லங்களுக்கு செல்லும்போது தனது மனைவியினால் தயாரித்த இன்சுவை பண்டங்களை எடுத்துச் செல்வார். ஒரு பொழுதும் வியாபாரத் தளங்களில் வாங்கிக்கொண்டு செல்லமாட்டார்.

அண்ணார் இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற அதிஉயர் பல்கலைக் கழகம் ஆகிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உயர் பட்டதாரி யாக பரீட்சையில் சித்தியெய்தியவர். அண்ணார் பட்டதாரி பட்டம் பெற்ற அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பதவி வழங்கியும் தனது சொந்த நாட்டுக்கு சேவைசெய்ய வேண்டும் என்ற மனத்துடன் நாட்டில் சேவையை ஆரம்பித்தார். அன்னார் கல்வியூட்டிய பாட சாலையில் இனம், சாதி, மதம், செல்வந்தர், ஏழை, என்ற பாகு பாடு இல்லாமல் சகல மாணாக்கர்களும் கல்வியில் முன்னேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து வாழ்வில் மேம்பட வேண்டும் என்று நன்மனத்துடன் சேவை செய்தார். அதுமட்டும் அல்லாமல் மாணவரிடமும் தனது சக ஆசிரியரிடமும் நன் மதிப்பைப் பெறத் தவறவில்லை. அன்னார் சமய பக்தியுடையவர்; மேடைப் பிரசங்கியும் ஆவர். இவற்றுக்கு எல்லாம் இவரின் பாரியார் பக்கத்துணையாக இருந்து உதவி புரிந்தார்.

இன்று அன்னாருக்கு தெய்வம் குரல் கொடுத்து அழைத்துத் தனது குடும்பம் பிள்ளை குட்டி உற்றார் உறவினர் நண்பர் என்று பாராது இறைவன் பின் சென்று சேர்ந்து விட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எங்கள் பிரார்த்தனைகள்.

மச்சான்மார், மச்சாள்மார்

□

எனது அருமை மகள் கமலாவுக்கு வாழ்வு அளிக்க ஆனந்தமாக வந்தீரே! இன்று இறைவனுடன் ஆனந்தமடைந்து விட்டீரே! மருமகனே! உமது மனைவியையும், நான்கு பிள்ளைகளையும், உற்றார், உறவினர், நண்பர்கள் என்று பாராமல் இவ்வுலக இன்ப வாழ்வை விட்டு, குரல் கொடுத்த இறைவனை நாடிச் சென்று விட்டீரே. எனது சௌகரியங்களை குறைய விடாது பாதுகாத்து வந்தீரே. நீர் இறைவனை நாடப்போவது தெரிந்தோ என்னை கொழும்பில் இருக்கும் எனது மகளிடம் கூட்டி வந்து ஒப்படைத்தீர். உமது இன்முகத்தில் புன்சிரிப்பு அற்று ஒளி அழிந்தது. எங்கள் குடும்பத்தில் ஒரு ஒளி விளக்கு அணைந்தது. உங்களின் மறைவு எங்கள் குடும்பத்துக்கு பெரிதும் ஈடுசெய்ய முடியாத இழப்பாக உள்ளது மருமகனே!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

மாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீறு

சிவ சின்னங்களில் திருநீறு, உருத்திராக்கம் திருவைந்தெழுத்து இவற்றினை எமது அருளாளர்கள் மிக இன்றியமையாததாகக் கூறுவதோடு அவற்றின் பெருமைகளையும் கூறி இருக்கின்றனர்.

திருவாளன் திருநீற்றைத் திலகவதியார் கொடுக்கப் பெருவாழ்வு வந்ததென வாங்கி அணிந்த வாகீசர் திருவெண்ணீறணியாத ஊரைக் காடெனக் கூறுகின்றார். ஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றினைப் போற்றி "திருநீறு செம்மை திடமே" எனப் பாடினார். பாண்டியனுக்குற்ற வெப்பு நோயைத் திரு நீற்றுப் பதிகத்தால் மாற்றியருளினார். சுந்தர மூர்த்தி சுவாமிகள் முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்" என்றார். மாணிக்க வாசகரோ "திரு நீறு அணிகிலாதாரைக் கண்டால் அம்ம "நான் அஞ்சுமாறே" என்றார்.

திரு வெண்நீறு ஆன்மாக்களை இரட்சிப்பதால் இரட்சை எனவும் ஆன்மாக்களை தீவினைகள் அனைத்தையும் நீறுபடுத்தலால் திருநீறு எனவும் அழியாத செல்வத்தைக் கொடுத்தலால் விபூதி எனவும், ஆன்மாக்கள் தோறும் கலந்துள்ள மலமாசைக் கழுவுதலால் சாரமென்றும், அறியாமை அறியும்படி ஞானமாகிய சோதியைத் தருதலின் பசிதம் எனவும், இடர் அச்சம் பழிபாவங்கள் முதலியவற்றைக் காப்புச் செய்தலிற் காப்பு எனவும் பெயர் பெறும்.

கன்றீன்று பத்துநாட்களுக்குட்பட்டு ஆசௌசம் நீங்காததுப் இரண்டு கன்றுகள் ஈன்றதும் முதிர்ந்தகன்றுடையதும், நோய் பொருந்தியதும், மலட்டுத்தன்மையுள்ளதும் கருப்பமுள்ளதும், கன்று இறந்ததும் வால், காது அறுந்ததும் ஆகிய பசுக்களது சாணம் ஆகாதாம். நல்ல பசுக்கள் வெண்மை, செம்மை நிறமுடைய சரீர மெலிவின்றி பங்குனி மாதத்து நெற்றாள்களை மேய்ந்த பசுக்களின் சாணமே ஏற்றது. அவற்றின் சாணத்தை பூரணை அமாவாசை என்னும் திதிகளில் தாமரையிலையில் சத்தியோசாத மந்திரத்தைச் சொல்லி நிலத்தில் விழமுன் ஏந்தி, மந்திரம் சொல்லி உருட்டி நெற்பதருடன் வைத்து ஓமாக்கினியில் வைத்துச் சுடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபூதியை உத்தூளனமாக திரிபுண்டரீகம் என இரண்டு வகையாக அணிவர்.

விபூதி ஸ்ரீபஞ்சாட்சரப் பொருளைத் தன்னுள் அடக்கியிருத்தலால் ''மந்திரமாவது நீறு'' எனவும் வேதத்திற் கூறிய உண்மைப் பொருளாதலின் ''வேதத்திலுள்ளது நீறு'' என்றும் ஞானத்தைக் கொடுப்பதால் ''போதந் தருவது நீறு'' எனவும் இம்மை, மறுமை இன்பத்தைத் தருவதால் இருமைக்கும் உள்ளது நீறு என்றும் மோட்சத்தைக் கொடுப்பதால், ''முத்தி தருவது நீறு'' என்றும் சம்பந்தப் பெருமான் விபூதியை சில பெருமானாகவே பாடுகின்றார்.

விபூதியில்லாத நெற்றி பாழ். சிவாலயமில்லாத கிராமம் பாழ். சிவபெருமானைப் பூசியாத ஜென்மம் பாழ். என பிருகத் ஜாபாலோபநிடதம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவம்

சிவம் என்னும் சொல் மங்கலம், சுகம், பாக்கியம், பேரானந்தம் என்னும் இன்பப் பொருளையே தரும். ஆனந்தம், அன்பு, இன்பம் என்னும் பொருள் தரும். சிவம் என்னும் சொல் இன்பவுருவாயே விளங்கும் முழு முதற் கடவுளுக்கு முதன்மைப் பெயராக வைத்து வழங்கப்படும் சிறப்பு எண்ணிப் பெருமைப்படக் கூடியதே. வேறெந்த மதத்திலும் கடவுள் இவ்வாறு இன்பப் பொருளில் வைத்து அழைக்கப் படவில்லை. சிவன் என்னும் மொழி சொல்லாலும் பொருளாலும் இன்பம் ஒன்றையே குறித்தல் பற்றியன்றோ திருமூலர். ''அன்பே சிவமாவது யாரும் அறிதிலார் என்றும் மணிவாசகப் பெருமானார் ''யாவையும் கடந்த இன்பமே என்னுடை அன்பே'' என்றும் கூறிப் போந்தனர்.

எல்லையற்ற அன்பின் வடிவே சிவமாயிருத்தல் பற்றியே அச் சிவத்தோடு இயைபுற்ற நமது சமயத்திலே எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டி ஒருயிரையுங் கொல்லாது புலான் மறுத்து ஒழுகுவா னைச் சைவன் என்கின்றன. புலால் உண்ணாதவன் நான் சைவனாகி விட்டேன் என்னும் சொல்லும் வழக்கு உண்டென்றால் கொல்லாமை. அதாவது அன்புடைமை சிவ மதத்தின் அடிப்படைப் பொருளாகத் தத்துவமாக இருக்கின்றது என்பதாம்.

உயிர்களுக்குப் பேரின்பத்தை ஊட்டும் அருட் பெருங் கடவுளான நம் சிவன் முதற்கண் அவ் உயிர்களைப் பற்றி வருத்தும் துன்பத்தை முற்றும் நீக்கித் தானே தனது இன்னருளால் இன்பத்தைக் கொடுக்க வேண்டும். எனவே அவன் முதலாக நமது துன்பத்தை நீக்கவேண்டும், எனவே நமக்கு அவ் உதவியைச் செய்யும் நம் ஆண்டவனை நாம் முதலில் துன்பத்தை அழிப்பவன் என்று அழைக்கத்தான் ஆசைப் படுவோம். அதற்கமையவே மிகப் பழமையான இருக்கு வேதம். ஆண்டவனை உருத்திரன் என்னும் பெயர் கொண்டு அழைக்கின்றது. இஃது துன்பத்தை ஓட்டுபவன் இருளை அறுப்பவன் என்று பொருள் படுவதாம். வைத்தியநாதன் துன்பம் அறுபட்டதே உயிர்கள் அதோடு நில்லா அலை இன்பப் பேற்றை அலாவும், பேரின்ப விளைவையே நாடும். அதற்கமைவாகவே அடுத்து வந்த யசுர் வேதம் சிவம் என்ற சொல்லால் இறைவனை ஏத்துகின்றது. எனவே இன்பப் பேற்றையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடி நிற்கும் உயிர்களுக்கு இன்ப உருவான பெயரைத் தாங்கி பேரின்பம்தரவல்ல சிவனை வாழ்த்தி வணங்கி உய்வு அடைவோமாக

கடவுள் என்னுஞ் சொல் எப்பொருளையுங் கடந்தோன் என்று அவன்றன் எட்டா நிலைமையினையும், இறைவன் எப்பொருளிலும் தங்குபவன் என அவன்றன் எங்குமுள்ள நிலைமையினையும் முதல்வன் அவன் எதற்கும் முற்பட்டவனாய் நிற்கும் அவன்றன் முதன்மையினையும் சொல்ல சிவன் என்னும்சொல்லும் அவன் ஏனைய எப்பொருளிலும் இல்லாத பேரின்பத்திற்கு உறையுளாய் உள்ளவனென்பதை அறிவிக்கும் ஒன்றாம். சிற்றுயிர்களாகிய நாம் அவன்றன் எட்டா நிலைமையினையும், எங்குமுள்ள நிலைமையினையும் எல்லாவற்றிற்கும் முற்பட்ட முதன்மையையும் உணர்தலாற் பெறும் பயன் சிறிதுமில்லை. நாம் தொன்று தொட்டு அறியாமையின் இடத்து துன்புற்று வருதலின் அறியாமையைக் களைதற்கு அறிவும் அவ் அறியாமையின் வாயிலாக வரும் துன்பத்தைக் களைதற்கு இன்பமுமே இன்றியமையாது வேண்டி நிற்கின்றோம். நாம் பிறவி எடுத்த தன் நோக்கமெல்லாம் பேரின்பத்தைப் பெறுதற் பொருட்டேயாம்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில்

திருக் கோயிலில்லாத திருவிலூரும்
திருவெண்ணீ றணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாலூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கு மூதாவூரும்
விதானமும் வெண் கொடியு மில்லா வூரும்
அரும்போடு மலர் பறித்திட்டுண்ணா வூரும்
அவையெல்லா மூரல்ல வடலிகாடே

இறைவன் அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்தவன் எனினும் ஆன்மாக்களுக்கு அருள்புரிவான். வேண்டித் திருமேனிகளை இடமாகக் கொண்டு திருக்கோயில்களில் எழுந்தருளிக் காட்சிதருகின்றான். சைவ சித்தாந்தத்தில் உருவ வழிபாடு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. உருவமற்ற எதனையும் நாம் உள்ளத்தால் நினைக்க முடியாது. ஒன்றியிருந்து நினைப்பதற்கு ஏதோ ஓர் உருவம் உள்ளத்தில் பதியப் பட வேண்டும். இந்த நோக்கத்துடனேயே பல்லாயிரக் கணக்கான திருக்கோயில்கள் நம் நாட்டில் எழுந்தன. பக்தி நெறிக்கு வாயில் களாக அமைந்தவை திருக்கோயில்களே நமது சுட்டுணர்வினால் அறியமுடியாத இறைவன் திருக்கோயில் வழியாக உயிர்களுக்குத் திருவருளை வழங்குகின்றான். பசுவின் உடம்பெங்கும் பால் நிறைந்து காணப்படுவதுபோல உலகம் முழுவதும் நிறைந்திருப்பது இறை சக்தி. பாலைப்பெறும் இடம் பசுவின் மடியா இருப்பதுபோல் இறை வன் அருளைப் பெறுமிடம் திருக்கோயில்களாக அமைகின்றன. மேலும் காற்று எங்கும் நிறைந்திருந்தாலும் வெப்பமும், புழுக்கமும் மிகுந்த சில நேரங்களில் அதனைப் போக்க விசிறி கொண்டு காற்றை வாங்கிக்கொள்ளுகிறோம். இந்த விசிறிபோல் எமது மல வெப்பத்தை அகற்றி அருள் நிழலைத் தர ஆலயங்கள் அமைந்துள்ளன.

''மாலற நேய மலந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே''

என்பதால் சிவனடியார்களையும் சிவாலயத்தையும் சிவனெனவே கண்டு தொழ வேண்டுமென்பார் மெய்கண்டார். சீவன் முத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் உடம்பு விடும் வரை ஆலய வழிபாடு முக்கிய மென்று வற்புறுத்தப்படுகிறது.

விண்ணுலகில் இறைவனை அபிஷேகித்து ஆராதனை செய்யுங் கிரியைகள் இல்லை. எனவே திருமால், பிரமன் முதலிய தேவர்கள் பூவுலகத்திற்கு எழுந்தருளித் தரிசித்துச் செல்வதோடு இவ்வுலக மக்களையும் வாழ்த்தி ஆசிகூறிச் செல்வதாகப் புராணங்களும், திருமுறைகளும் தெரிவிக்கின்றன.

> கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
> முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
> அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
> எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

என்பார் அப்பர் அடிகள்.

இனி ஆலயம் தோன்றிய வரலாறு:- ஆதி மனிதன் முதலில் தனக்கு உதவியவற்றை, இயற்கைப் பொருள்களை வணங்கி வந்தான். சூரியன், சந்திரன், பஞ்சபூதம் என்பவற்றை அருவ நிலையில் வணங்கினர். பின்பு அவற்றிற்குரிய உருவங்களைக் கண்டு வணக்கம் செலுத்தினர். காலகதியில் தமக்கு நிலையான வீடு தேவைப்பட்டது போல் தாம் வழிபடும் இறைவனை வெய்யிலிலிருந்தும், மழையிலி ருந்தும் காப்பதற்கு மரநிழல் அமைத்து மேடையும் கட்டினர். ஆலயங்கள் எழுந்தன. ஆண்டவனும் அடியார்க்கு எளியவனாகிக் காட்சி கொடுத்தான். பூசலார் நாயனார் இறைவனுக்குத் தன்னுள் ளத்திலேயே கோயில் கட்டினார். அதற்குக் குடமுழுக்குச் செய்ய வும் ஒரு நாட் குறித்து விட்டார். அதே நாளில் கழற் சிங்கன் என்ற அரசனும் தான் புறத்தே கட்டிய கோயிலில் சுவாமியை பிரதிட்டை செய்ய நிச்சயித்திருந்தான்.

எம்பெருமான் பூசலாரின் அன்பின் பெருக்கில் கட்டுண்டமையால் கழற்சிங்கனுக்குக் கனவிலே தோன்றி தான் பூசலாரின் மனக் கோயி லுக்கு எழுந்தருள இருப்பதாக உணர்த்துகிறார்.

கழற்சிங்கன் உள்ளம் தங்குவதற்கு உடம்பும் ஐம்புலன்களும் அமைந்துள்ளவாறு போல எங்கும் நிறைந்த பரம்பொருளுக்கு புறத்தே ஒரு கோயிலைக் கட்டினான்.

> ''உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்
> வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
> தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
> கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே''

இந்தத் தத்துவ அடிப்படையில் கோயில்கள் எழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூல உலகில் வாழும் மனிதனை ஆக்கும் உலகில் அருட் சக்திகளோடு இணைக்கும் நிலையங்களே ஆலயங்களாகும். ஆலயங்களிற் காட்சி தரும் விக்கிரகங்கள் தான் இறைவன் அல்ல. அவற்றினூடே விளங்கும் மெய்ப் பொருள் தான் இறைவன், மரத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு யானை, மரத்தின் தன்மையைக்காண முற்படுவோர்க்கு யானை தெரிவதில்லை. அதேபோல் யானையின் இலக்கணத்தைப் பார்ப்பவர்க்கு யானை தெரிவதில்லை. அதுபோல் எல்லாம் இறைமயமாய் விளங்கும் போது உலகத் தோற்றம் உண்டாவதில்லை. ஆனால் பிரபஞ்சம் தோன்றும். இறைவன் வடிவு விளங்குவதில்லை. இக்கருத்தினை விளக்குவதே உருவ வழிபாடாகும்.

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்

என்ற திருமந்திரப் பாடல் இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்னர் ஆலயங்களின் உட்பொருளை விளக்க எழுந்ததாகும். மேலும் இதனையே சித்தியாரும். "திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னை சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவான் ஆங்கே" நாயன்மார்கள் கண்ட திருக்கோயில் மகிமை. மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையிலிருந்து புறப்பட்டுத் தொழுதகை தலைமேற் கொண்டு தளுப்பு கண்ணீரில் மூழ்கியவாறு சென்றார். ஆட்கொண்ட பெருமானுடைய திருக்காட்சியைக் காண அவாவினார். "தேடிற்றிலேன். சிவன் எவ்விடத்தான்" என்று கேட்டுக்கொண்டே சென்றார். பக்தி வயப்பட்ட நிலையிலே திருக்கழுக் குன்றத்திலே அவருக்குக் காட்சி கிட்டியது. மேலும், "தில்லைக்கு வா" என்று எம்பெருமான் அருளியதும் ஆலயத்தின் முக்கியத்துவத்தை எமக்குக் காட்டுகின்றது.

நம்பியாரூரருக்கும் இறைவன் முதலில் தனது இருப்பிடம் ஒரு கோயிலாகவே காட்டுகின்றார். வழக்கிலே தோற்றி நம்பியாரூரர் வேதியரின் ஊர் எது என்று கேட்க வேதியர் ஒருவரும் அறியீராகிப் போதும் என்று திருவருட்டுறையே புக்கார் கண்டிவர் திகைத்து நின்றார். எனவே இறைவன் வசிக்கும் இடம் ஆலயம் என்பதை இறைவனே காட்டுகிறார்.

ஞானக் குழந்தையோ திருத்தோணிபுரக் கோபுரத்தைச் சுட்டிக் காட்டி "பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவனன்றே" எனப் பாடித் தனக்குப் பால் தந்த பிரானைக் காட்டியருளியதும் ஆலயத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்த் தெய்வம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்

உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்கும் நிலையில் இறைவன் முதலில் எடுக்கும் வடிவம் தாய் வடிவமாகும். அதாவது குழந்தையைப் பெற்றுப் பாலூட்டி, தாலாட்டித் தொட்டிலில் வளர்த்தி பின்பு சிறிது வளர்ந்த பின் விளையாட விட்டுப் பின் நின்று பார்த்து மகிழ்பவள் தாய். எவை எவை எப்போது தேவை என அறிந்து கொடுத்து வளர்ப்பது அன்றி அமைதியாக உறங்க வைப்பளுவம் தாய். இதே நிலையில்தான் இறைவனும் தாயாக நின்று ஆன்மீக நாடிகளைப் பேணி எடுத்துப் பிறப்பறுக்கின்றான் என்பது சைவசித்தாந்த முடிவு. மாணிக்கவாசகரும் "பால் நினைந்தூட்டும் ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது திருக்கூத்து. இதனை ஆடுபவன் நடராசன் தாளம் போடுபவர் பராசக்தி. அம்மையின் தாள லயம் குன்றினால் அப்பனின் தாண்டவம் பிழைத்தால் உலக இயக்கமே தாறுமாறாகிவிடும். இதனால் எம்பெருமான் அம்மையின் பக்கம் அமைதியாக ஆடுகிறான்.

"மாதொரு பாகம் நோக்கி
மன்னு சிற்றம் பலத்தே
ஆதியும் முடிவு மில்லா
அற்புதத் திருக் கூத்தாடும் நாதனார்"

— என்று போற்றுகிறார் சேக்கிழார்

இறைவனையும் இறைவன் அருளையும் ஆணென்றும் பெண்ணென்றும் சிவன் என்றும் சக்தி என்றும் கூறுவர். இங்கு சிவன், சக்தி என்று பாகுபடுத்திக் கூறினாலும் உண்மையில் இரண்டு பொருள் இல்லை. ஒரு பொருள் இரண்டு நிலையில் விளக்கப்படுகின்றது. என்பதே பொருள். உவமை:- கதிரவன் தன்னிலையில் கதிரவனாக விளக்கப்படினும் நமக்குப் பயன்படு நிலையில், ஒளிக் கதிராக வெயிலாக விளக்கப்படுகிறான். இவ்வாறு விளக்கப்படினும் பொருள் ஒன்று. இதே போன்று சந்திரனையும் நிலாவையும் குறிப்பிடலாம். இறைவனும் இதைப் போன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நிலைகளில் விளக்கப்படுகின்றான்: தன்னிலையில் சிவன் என்னும் ஆன்மாக்களோடு கொண்டுள்ள தொடர்பு நிலையில் சக்தி என்றும் விளக்குவர். இச்சக்தியே அருள். இறைவன் ஆன்மாக்களோடு கொண்டுள்ள தொடர்பே அருள்.

இவ்வாறு அருளால் ஐந்தொழில்கள் நிகழ்கின்றன எனக் கூறுவதற்கு வேறாக பராசக்தியே ஐந்தொழில்களையும் நிகழ்த்துவதாகக் கூறுவதுண்டு.

இறைவனின் சக்தி இரண்டு நிலையில் செயல்படுகின்றது. ஒரு நிலை மறைந்திருந்து உதவுதல், ஆதிசக்தி. அஃது திரோதான சக்தி. பிறிதொரு நிலை வெளிப்பட்ட நிலை அஃது பராசக்தி. இரு வினை ஒப்பு. மலபரிபாகம் பெற்ற ஆன்மாக்களுக்கு பராசக்தியின் நேர் தரிசனம் கிடைக்கிறது. அதற்கு முற்பட்ட நிலையில் சக்தி மறைந்து நின்று தான் செய்து வருகின்றாள். இஃது தான் இருவினை ஒப்பு மலபரிபாகங்களுக்கு காரணமாகின்றது.

இவ்வருட் சக்தி தனக்கு உதவும் நிலையில் பிறவாற்றாலும் விலக்கப்படுதல் உண்டு. ஆன்மாக்களுக்கு மூன்று இயல்புகளைக் கூறுவர். விருப்பு (இச்சை), செயல் (கிரியை), அறிவு (ஞானம்) அவற்றைச் செம்மைப்படுத்தி இயக்குவதற்காக இறைவனருளும் மூன்று சக்தியாக இருந்து உதவுகின்றது. அவை இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியாம். பின்னர் சொன்ன மூன்று சக்திகளும் பராசக்திக்கு வேறானவை அல்ல. பராசக்தியின் வெவ்வேறு தோற்றங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர்

திருவள்ளுவர் வரலாற்றை வரையறையாகக் கூறும் நூல் ஏதும் இல்லை. அவருடைய பிறப்பு, குலம், தொழில், சமயம், காலம் ஆகியவற்றைப் பற்றி பல்வேறு கொள்கைகள் இருந்து வருகின்றன. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகின்றது. திருவள்ளுவர் யாவராலும் மதிக்கப் பெறும் பெரும் புலவர். ஆதலின் அவரைத் தாம் தமக்கு விருப்பமான நெறியை சார்ந்தவர் என்று சொல்லும் முயற்சி, அவருடைய வரலாற்றைக் கூறப்புகும் பலரிடையும் இருக்கின்றது. குணங்குறி கடந்து நின்றும் சமயவாதிகளெல்லாம் தம் தெய்வம் எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்ற கடவுளைப் போலத் திருவள்ளுவர் இருக்கிறார் என்று கூறலாம்.

புலவர் புராணமும் கபிலர் அகவலும் திருவள்ளுவர் ஆதியென்னும் புலைமகட்கும் பகவன் என்னும் அந்தணனுக்கும் மகன் என்று கூறும். மேலும் இவரோடு ஔவை, கபிலர், வள்ளி, அதிகமான் என்பவர்களும் பிறந்தார்களென்றும் அவர்களைப் பெற்றவுடனே அவர்கள் தந்தையாரின் சொற்படி தாயார் அங்கங்கே விட்டுச் சென்றனரென்றும் கதை உண்டு. இவை முனிவர்களின் பிறப்பை இவ்வாறு கூறும் ஒரு முறையை எண்ணிக் கட்டி விடப்பட்ட கதை என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயில் ஒன்று இருப்பதைக் கொண்டு இவர் மயிலாப்பூரில் பிறந்தவரென்றும், வாசுகி என்னும் அம்மையாரை மணந்து அவரின் கற்பின் திறத்தைப் பல வகையில் சோதனை செய்து வெளிப்படுத்தினார் என்றும் கூறுவர். இவை எவ்வாறு இருந்த போதும் வள்ளுவப் பெருமானார் எமக்கு அளித்து பெருமை தேடித்தந்த நூல் திருக்குறளாகும். அந்நூல் இருக்கு மட்டும் வள்ளுவப் பெருமானார் பெருமையும் உலகுள்ளளவும் பேசப்படும்.

திருக்குறள் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றித் தமிழ் மொழிக்குத் தனிப் பெருமை தந்து நிலவும் தலைசிறந்த நூல் என்பது யாவரும் அறிந்த உண்மை ஆகும். ஆயிரத்து முந்நூற்று முப்பது அருட்பாக்களைக் கொண்ட இந் நூலில் அறம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவிற் கூறப்பட்டுள்ள செய்திகள் பெரும்பாலும் எல்லோருக்கும், எக்காலத்துக்கும் ஏற்றன. பிற மொழியாளர் பலர் இந்நூலைத் தம் மொழிகளில் மொழி பெயர்த்துக் கொண்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இவ்வாறு உலகம் முழுவதுக்கும் இது பயன்படுவதால் தான் '' வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு'' என்று பாரதியாரும் போற்றுகின்றார்.

வள்ளுவர் வாய் மொழியாகிய குறள் பேச்சு மொழியின் மரபைப் பெற்று குறைந்த சீர்களைக் கொண்ட குறட்பாலால் விளங்கி, ஆற்றல் மிக்கவையாக விளங்குகின்றது. குறைந்த அடிகளால் விளங்கும் காரணத்தாலேயே இந் நூலுக்கு குறள் எனப் பெயர் அமைந்து, சிறப்பு அடையாகிய திரு என்பது சேர்ந்து திருக்குறள் எனப் பெயர் பெற்றது என்பர்.

வள்ளுவர் வாய் மொழியோ சொல்லும் திறன் அறிந்து சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு சொல்லப்படவில்லையானால் அஃது அறத்தை வற்புறுத்தும் நீதி, நெறி நூலாகவோ, பொருளைப் பொருட்படுத்தும் பொருளியல் நூலாகவோ, இன்பத்தை வகைப் படுத்தும் இன்பவியல் நூலாகவோ, தருக்கை வாதங்கள் மிக்க தத்துவ நூலாகவோ அமைந்திருக்குமேயன்று உலகம் போற்றும் உயர்ந்த இலக்கியங்களுள் ஒன்றாக விளங்கி இருக்காது.

எனவே இத்தகைய சிறப்பெல்லாம் தந்து தமிழையும், தமிழனையும் உலகறியச் செய்த பெருந்தகை திருவள்ளுவர். அன்னார் நூலினைக் கசடறக் கற்று, அதன் வழி ஒழுகிப் பெருமை கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்கள் குடும்பத் தலைவரும், வழிகாட்டியுமான திரு. க. தேவதாசன் சுகவீனமுற்று மந்திகை வைத்தியசாலையில் இருந்தபோது எமக்கு உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும், அங்கிருந்து பூதவுடலை தொல்புரம் கொண்டு வருவதற்கு உதவி புரிந்த அனைவருக்கும், மரணச் சடங்கில் பங்கு கொண்டோர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

எங்கள் தலைவரின் மரணச் செய்தி கேட்டு அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், நேரில்வந்து ஆறுதல் வார்த்தைகள் கூறித் தேற்றிய அன்பர்கள், உற்றார். உறவினர், அயலவர் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அந்தியேட்டிக் கிரியைகள் சிறப்புடன் நிகழ அயராது உழைத்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்நினைவு மலருக்குப் பா யாத்துத் தந்தவர்க்கும், விடயங்களை [இரங்கலுரை] எழுதிக் கொடுத்தவர்களுக்கும், குறிப்பாக, ஆசிரியப்பா எழுதித் தந்த பண்டிதை பொன். பாக்கியம் ஆசிரியர் அவர்களுக்கும், இந்நினைவு மலரை சிறப்பாக தொகுத்துத் தந்த அதிபர் - சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்

மனைவி, மக்கள்,
அண்ணா, அண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Swarnakumar Avittam. 23.04.1976
Vasanthakumar Mirugaseeridam 18.04.1972
Devaki 1.06.1986
Shanthi 30.01.1979

அச்சிட்டோர்:
**குமரன் அச்சகம்**
*201, டாம் வீதி,*
*கொழும்பு-12.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org